# இயல் 5 இன்பத் தமிழ் கல்வி

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.பெண்களுக்கு நிகராக பாரதிதாசன் கூறுவது ________

அ. மயில் ✓ ஆ. குயில் இ. கிளி ஈ. அன்னம்

2.பின்வருவனவற்றுள் மலையை குறிக்கும் சொல் __________

அ. வெற்பு ✓ ஆ. காடு இ. கழனி ஈ. புவி

3.ஏடெடுத்தேன் என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______

அ.ஏடெடு + தேன் ஆ.ஏட்டு + எடுத்தேன்

இ. ஏடு + எடுத்தேன் ✓ ஈ.ஏ + டெடுத்தேன்.

4. 'துயின்றிருந்தார் ' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது __________

அ.துயின்று + இருந்தார் ✓ ஆ. துயில் + இருந்தார்

இ. துயின்றி + இருந்தார் ஈ. துயின் + இருந்தார்

5. என்று + உரைக்கும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ___________

அ. என்றுஉரைக்கும் ஆ. என்றிரைக்கும்

இ. என்றரைக்கும். ஈ. என்றுரைக்கும் ✓

பொருத்துக.

1.கழனி - வயல்

2. நிகர் - சமம்

3. பரிதி - கதிரவன்

4. முகில் - மேகம்

குறுவினாக்கள்

1.பாரதிதாசன் குறிப்பு வரைக.

- கவிஞர், இதழாளர், தமிழாசிரியர் எனப் பன்முக ஆற்றல் கொண்டவர் பாரதிதாசன்.
- இவர் கவிதை, கதை, கட்டுரை, நாவல் ஆகியவற்றைப் படைப்பதில் வல்லவர்.
- பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இசையமுது, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, கண்ணகி புரட்சிக் காப்பியம் உள்ளிட்ட பல நூல்கள் எழுதியுள்ளார்.
- இவர் எழுதிய பிசிராந்தையார் என்னும் நாடக நூலுக்கு சாகித்திய அகாடமி விருது அளிக்கப்பட்டது.

2.பாரதிதாசனிடம் தன்னைப் பற்றிக் கவிதை எழுதக் கேட்டவை எவை? எவை?

பாரதிதாசன் கவிதை எழுத ஏடு எடுத்தபோது,

- வானமும்,
- நீரோடையும்,
- தாமரை மலர்களும்,
- காடும், வயல்களும், மேகமும்,
- ஆடும் மயில் போன்ற பெண்களும்,
- தென்றலும், மயிலும், அன்னமும் மற்றும் கதிரவனும்,
- வேலையேந்திய வீரர்களும் தங்களைப் பற்றிக் கவிதை எழுதக் கேட்டனர்.

3.தமிழ் மொழிக் கல்வி பயில்வதால் உண்டாகும் நன்மைகள் என பாரதிதாசன் கூறுவன யாவை?

துன்பத்தில் கிடக்கும் தமிழ்நாட்டு மக்கள் அறியாமையில் தூங்கிக் கிடக்கிறார்கள். அந்தக் காட்சி என் மனதில் இரக்கத்தை உண்டாக்கி என் உயிரில் வந்து கலந்து விட்டது. இத்துன்பம் நீங்க அனைவரும் இன்பத்தமிழ்க் கல்வியைக் கற்றவர்கள் என்னும் நிலை ஏற்பட வேண்டும். அந்நிலை ஏற்பட்டால் வாழ்வில் துன்பங்கள் நீங்கி விடும். நெஞ்சில் தூய்மை உண்டாகிடும்.வீரம் வரும்.